# பெரியார் பல்கலைக்கழகம்
# PERIYAR UNIVERSITY
**SALEM – 636 011, TAMIL NADU**
**NAAC A++ Grade – State University – NIRF Rank 56 – State Public University Rank 25**

**முனைவர். P.விஸ்வநாதமூர்த்தி**
**தேர்வாணையர் (பொ)**

PU/COE/CRE-VIII/ June-July-2025/ Ph.D - Course Work & M.Phil Exam/2025 நாள்: 27-05-2025

பெறுநர்

1. துறைத் தலைவர்கள், பெரியார் பல்கலைக்கழக துறைகள்
2. இயக்குநர், பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தருமபுரி
3. முதல்வர்கள், பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற ஆய்வியல் அறிஞர் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பாட பிரிவுகள் உள்ள கல்லூரி

ஐயா/அம்மையீர்,

பொருள்: பெரியார் பல்கலைக்கழகம், சேலதட - ஜுன்/ஜுலை 2025 - ஆய்வியல் அறிஞர் படிப்புத் தேர்வு (Ph.D Course Work Examinations) - Online மூலம் விண்ணப்பம் பதிவு செய்தல் மற்றும் தேர்வு கட்டணம் செலுத்துதல் - ஆய்வியல் நிறைஞர் (M.Phil) எழுத்துத் தேர்விற்கு Online மூலம் விண்ணப்பம் பதிவு செய்தல் மற்றும் தேர்வு கட்டணம் செலுத்துதல் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை: துணைவேந்தர் அவர்களின் குறிப்பாணை நாள் : 27-05-2025

*****

பார்வையில் காணும் துணைவேந்தர் அவர்களின் குறிப்பாணையின்படி, பெரியார் பல்கலைக்கழக துஜறகள், பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தருமபுரி மற்றும் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் முனைவர் பட்டத்திற்கு பதிவு செய்துள்ள ஆய்வியல் அறிஞர்களில் (Ph.D Scholar) 18-09-2024 முதல் 30-04-2025 வரையில் பாடத்திட்டம் ஒப்புதல் (Syllabus Approval) பெற்றுள்ள ஆய்வாளர்களுக்கும், முந்தைய படிப்புத் தேர்வுகளில் நிலுவைத்தாள்கள் வைத்துள்ள ஆய்வாளர்களுக்கும் ஜுன்/ஜுலை 2025-ல் படிப்புத் தேர்வு (Ph.D Course Work Examinations) நடைபெற உள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், பெரியார் பல்கலைக்கழக துறைகள், பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தருமபுரி மற்றும் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பயின்று உரிய காலத்திற்குள் தேர்வு எழுதாமல் மற்றும் தேர்வு எழுதி தேர்ச்சி பெறாமல் நிலுவைத் தாள்கள் வைத்துள்ள மாணாக்கர்களுக்கும் ஜுன்/ஜுலை 2025-ல் எழுத்து தேர்வு நடைபெற உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| படிப்புத் தேர்வு (Ph.D) விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ.75/- |
| படிப்புத் தேர்வு (Ph.D) மதிப்பெண் பட்டியல் கட்டணம் | ரூ.125/- |
| படிப்புத் தேர்வு (Ph.D) கட்டணம் தாள் ஒன்றுக்கு | ரூ.1,150/- |

கனிவுடன் திருப்புக……

| | |
|---|---|
| ஆய்வியல் நிறைஞர் (M.Phil) விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ.75/- |
| ஆய்வியல் நிறைஞர் (M.Phil) மதிப்பெண் பட்டியல் கட்டணம் | ரூ.125/- |
| ஆய்வியல் நிறைஞர் (M.Phil) கட்டணம் தாள் ஒன்றுக்கு | ரூ.405/- |

இத்தேர்வு விண்ணப்பங்கள் பெரியார் பல்கலைக்கழக www.periyaruniversity.ac.in என்ற வலைதளத்தில் Login செய்து தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட Username மற்றும் Password-ஐ பயன்படுத்தி Online மூலமாக 28-05-2025 முதல் 10-06-2025 வரையில் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், பதிவு செய்த அனைத்து மாணாக்கர்களின் விவரங்களை சரிபார்த்து தேர்வுக் கட்டணங்களை நேரடியாக Online Payment RTGS (Union Bank of India Account No. : 334101010200707) முறையில் ஒரே தொகையாக (Single Payment) செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தேர்வுக் கட்டணம் செலுத்த இறுதி நாள் : 13-06-2025. அவ்வாறு தேர்வுக் கட்டணத்திற்கான தொகை செலுத்திய வங்கி இரசீது மற்றும் மாணாக்கர்கள் விவரத்தினை சரிபார்த்து கையொப்பமிட்ட அறிக்கையினை (Nominal Roll Report) 12-06-2025 மாலை 05.00 மணிக்குள் தேர்வாணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. Online தேர்வு விண்ணப்பதிவு தொடர்பாக ஏதேனும் விவரம் தேவைப்படின் cre8coe@periyaruniversity.ac.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

27/05/2025

தேர்வாணையர்

27/05/2025